# அருப்புக்கோட்டை நகராட்சி

**விளம்பி ஆண்டு புரட்டாசி மாதம் நாள் : 02.11.2018 வெள்ளிக் கிழமை மாலை 3.30 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் தனி அலுவலர் அறையில் நடைபெற்ற நகர்மன்ற அவசர கூட்ட நடவடிக்கைகள்.**

**முன்னிலை :– திரு.சு.சு.சுரேஷ்குமார்**

**தனி அலுவலர்**

**பொருள் 1 :** விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட அருப்புக்கோட்டை நகரம் மலையரசன் கோவில் சாலையின் தெற்கு பகுதியிலுள்ள பழைய பைபாஸ் எண் 1267, பழைய சர்வே எண் 111/5 மற்றும் 111/6 ஆகியவற்றின் விவரங்கள் மற்றும் மேற்படி நிலத்தின் முந்தைய காலங்களுக்கான டவுண் சர்வே பீல்ட் ரிஜிஸ்டர் extract சர்வே மேப் 1/10 பட்டா மற்றும் சிட்டா (அடங்கல்) நகல் வழுங்க கோரியது தொடர்பாக சென்னை உயர்நீதி மன்றத்தில் அருப்புக்கோட்டை சிவ வன்னிய நாடார் நினைவாக டிரஸ்ட் சார்பாக திரு.எஸ்.ஜனகராஜன் அவர்கள் அருப்புக்கோட்டை நகராட்சி ஆணையாளரை 3ம் பிரதிவாதியாக (பொது நல வழக்கு) (PLT) சென்னை உயர் நீதி மன்ற வழக்கு எண் : WP (MD) No.13153/2018ல் சேர்க்கப்பட்டுள்ளது. மேற்படி வழக்கினை சென்னை உயர்நீதிமன்ற வழுங்கறிஞர் திரு.N.திலீப்குமார் மூலம் நடத்துவதற்கு ஆகும் உத்தேச செலவினத்திற்கு மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :–**

மன்றம் அனுமதி வழுங்கலாம்.

ந.க.எண்.3116/2018 /எப்1

**<u>தீர்மானம் :</u>**

அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**<u>தீர்மான எண்.530</u>**

**பொருள் 2 :** விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட அருப்புக்கோட்டை நெசவாளர் காலனி பராமரிப்பு நலச்சங்கம் பதிவு எண் : 141/2013 ன் தலைவர் பெரியசாமி மூலம் 2ம் பிரதிவாதியாக அருப்புக்கோட்டை நகராட்சி ஆணையாளரை அருப்புக்கோட்டை சப்கோர்ட்டில் வழக்கு எண் I.A.No.1275/2018, 1276/2018 O.S.No.155/2018ல் சேர்க்கப்பட்டுள்ளது. மேற்படி வழக்கானது வார்டு ஏ, பிளாக் 19, டவுண் சர்வே எண் 66/1ல் உள்ள தெருவிற்கு சாலை அமைக்க நகராட்சியில் எடுக்கப்பட்ட பணிக்கு இடைக்கால உத்தரவு கோரியும் மேற்படி வழக்கிற்கு சமாதான கூட்டத்தில் 2008ம் ஆண்டில் 15 அடி பாதைக்கு பதிலாக தற்சமயம் 24 அடி அளவிற்கு அமைக்க உள்ளது. ஆட்சேபனை தெரிவிக்க வழக்கு தொடரப்பட்டுள்ளது. மேற்படி வழக்கு தொடர்பாக நகராட்சி வழக்கறிஞர் திரு.டி.சங்கரன் ஆஜராகுவதற்கு மன்றம் அனுமதிக்கலாம். அதற்குண்டான உத்தேச வழக்கிற்கான செலவினத்திற்கு மன்றம் அனுமதி கோரலாம்.

**அலுவலகக் குறிப்பு :–**

மன்றம் அனுமதி வழுங்கலாம்.

ந.க.எண்.8931/2018/எப்1

**<u>தீர்மானம் :</u>**

அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**<u>தீர்மான எண்.531</u>**

**பொருள் 3 :** அருப்புக்கோட்டை கிராமம் வார்டு எப்.பிளாக்7, நகரளவு எண்கள் : 4/2, 4/6, 5/1, 5/2 (சர்வே எண்கள் 273/2 6, 275/1,2)ல் 499 ஏக்கர்(20203.0 ச.மீ) பரப்பளவில் அமைந்துள்ள அனுமதியற்ற மனைப்பிரிவை அரசாணை எண்கள் 78,172 H&UD நாள் 04.05.2017 மற்றும் 13.10.2017ன் படி வரன்முறைப்படுத்த கோரி திரு.எஸ்.வெங்கடேசன் என்பவர் விண்ணப்பித்ததன் பேரில் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், மதுரை அவர்களால் ம.வ(மு)/ ந.ஊ.து.இ.(மம) எண் 190/2018, நாள் 19.04.2018ல் கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கியுள்ளார். மேற்படி ஒப்புதல் பெறப்பட்ட அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவில் உள்ள சாலைகளை ஆவண எண் 4569, நாள் 28.09.2018ல் மனுதாரரால் நகராட்சிக்கு தானமாக வழங்கப்பட்டுள்ளது. மேற்படி சாலை மற்றும் பூக்காக்களை நகராட்சி ஏற்று நகராட்சி அசையாச் சொத்து பதிவேட்டில் பதிவு செய்யலாம்.

**அலுவலகக் குறிப்பு :–**

மன்றம் அனுமதி வழஙகலாம்.

ந.க.எண்.3552/2018 /எப்1

**<u>தீர்மானம் :</u>**

அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**<u>தீர்மான எண்.532</u>**

**பொருள் 4 :** அருப்புக்கோட்டை நகராட்சிக்கு சொந்தமான திருமேனி மடத்து தெரு கடை எண் 3 ஐ குத்தகை உரிமம் பெற்று நடத்தி வந்த திரு.எஸ்.சுகதேவன் என்பவர் தொடர்ந்து கடையை நடத்த முடியாத காரணத்தினால் மேற்படி கடையை நகராட்சி வசம் மீள ஒப்படைத்துள்ளார். மேற்படி கடையை பொது ஏலத்தில் விட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதி வழஙகலாம்.
2. ஏலம் நடத்தி புதிய ஒப்பந்ததாரருக்கு கடை ஒப்படைக்கும் வரை உள்ள வாடகை தொகையினை ஏற்கனவே உரிமம் பெற்றவரிடம் பிடித்தம் செய்ய மன்றம் அனுமதி வழஙகலாம்.
3. மேற்படி கடையை பொது ஏலத்தில் விடும் போது ஏற்கனவே உள்ள தொகையை காட்டிலும் குறைவான தொகைக்கு ஏலம் கோரப்பட்டால் ஏற்படும் வித்தியாச தொகைக்கும் ஏற்கனவே உரிமம் பெற்றவரிடம் வைப்புத் தொகையில் பிடித்தம் செய்ய மன்றம் அனுமதி வழஙகலாம்.

ந.க.எண்.5687/2018/அ1

**<u>தீர்மானம் :</u>**

அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**<u>தீர்மான எண்.533</u>**

**பொருள் 5 :** அருப்புக்கோட்டை நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண் 8 காரியம் தனுஷ்கோடி தெரு கடை எண் 7ஐ குத்தகை உமிம் பெற்று நடத்தி வந்த திருமதி.ஈஸ்வரி என்பவர் கடையை தொடர்ந்து நடத்த முடியாத காரணத்தினால் மேற்படி கடையை நகராட்சி வசம் மீள ஒப்படைத்துள்ளார். மேற்படி கடையை பொது ஏலத்தில் விட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதி வழஙகலாம்.
2. ஏலம் நடத்தி புதிய ஏலதாரருக்கு கடை ஒப்படைக்கும் வரை உள்ள வாடகை தொகையினை ஏற்கனவே உரிமம் பெற்றவரிடம் பிடித்தம் செய்ய மன்றம் அனுமதி வழஙகலாம்.
3. மேற்படி ஏலத்தில் ஏற்கனவே உள்ள தொகையை காட்டிலும் குறைவான தொகைக்கு ஏலம் கோரப்பட்டால் ஏற்படும் வித்தியாச தொகைக்கும் ஏற்கனவே உரிமம் பெற்றவரிடம் வைப்புத்தொகையில் பிடித்தம் செய்ய மன்றம் அனுமதி வழஙகலாம்.

ந.க.எண்.6390/2018/அ1

**<u>தீர்மானம் :</u>**

அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**<u>தீர்மான எண்.534</u>**

**பொருள் 6 :** அருப்புக்கோட்டை நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண் 8 காரியம் தனுஷ்கோடி தெரு கடை எண் 10ஐ குத்தகை உமிம் பெற்று நடத்தி வந்த திரு.ம.நித்தியானந்தம் என்பவர் கடையை தொடர்ந்து நடத்த முடியாத காரணத்தினால் மேற்படி கடையை நகராட்சி வசம் மீள ஒப்படைத்துள்ளார். மேற்படி கடையை பொது ஏலத்தில் விட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதி வழஙகலாம்.
2. ஏலம் நடத்தி புதிய ஏலதாரருக்கு கடை ஒப்படைக்கும் வரை உள்ள வாடகை தொகையினை ஏற்கனவே உரிமம் பெற்றவரிடம் பிடித்தம் செய்ய மன்றம் அனுமதி வழஙகலாம்.

3. மேற்படி கடையை பொது ஏலத்தில் விடும் போது ஏற்கனவே உள்ள தொகையை காட்டிலும் குறைவான தொகைக்கு ஏலம் கோரப்பட்டால் ஏற்படும் வித்தியாச தொகைக்கும் ஏற்கனவே உரிமம் பெற்றவரிடம் வைப்புத்தொகையில் பிடித்தம் செய்ய மன்றம் அனுமதி வழஙகலாம். ந.க.எண்.4520/2018/அ1

**<u>தீர்மானம் :</u>**

அலுவலக குறிப்பு அஙகீகரிக்கப்பட்டது.

**<u>தீர்மான எண்.535</u>**

**பொருள் 7:** நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–5 அவர்களின் 25.09.2018ம் தேதிய ந.க.22660/2018/டிபிடி எண் சுற்றறிக்கையில் மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் கட்டிட அனுமதிக்கான கூர்ந்தாய்வு கட்டணம் ரூ.500/– எனவும் அதனை ஆன்லைனில் மட்டுமே செலுத்த வேண்டுமெனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேற்படி சுற்றறிக்கையின்படி நடைமுறைப்படுத்த மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :–**

மன்றம் அனுமதி வழஙகலாம். ந.க.எண்.9147/2018 /எப்1

**<u>தீர்மானம் :</u>**

அலுவலக குறிப்பு அஙகீகரிக்கப்பட்டது.

**<u>தீர்மான எண்.536</u>**

**பொருள் 8 :** நகாட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் துறை அரசாணை எண்.M.S.No.73, நாள் 19.07.2018 மற்றும் அரசாணை எண் M.S.No.76, நாள் 26.07.2018 ன் படி 01.04.2018 முதல் சொத்துவரி பொது சீராய்வு மேற்கொள்ளப்பட உள்ளதை தொடர்ந்து குடியிருப்பு கட்டிடஙகளுக்கு 50 சதவீதம் மிகாமலும், குடியிருப்பு அல்லாத தொழிற்சாலை மற்றும் வணிகப் பயன்பாடு உள்ள கட்டிடஙகளுக்கு 100 சதவீதம் மிகாமலும் வரி உயர்வு செய்ய தெரிவிக்கப்பட்டதை இந்நகர்மன்ற தீர்மான எண்.487, நாள்.24.08.2018ம் தேதிய மன்றத்தில் வைத்து பதிவு செய்யப்பட்டுள்ளது.

அதை தொடர்ந்து இந்நகர்மன்ற தீர்மான எண்.496, நாள் 10.09.2018ம் தேதிய மன்றத்தில் A,B மற்றும் C ஆகிய மூன்று மண்டலஙகளுக்கும் கீழ்க்கண்டவாறு மண்டல மதிப்பு உயர்வு செய்ய அனுமதி வழஙகப்பட்டுள்ளது.

| சதுரடிக்கான மண்டல மதிப்பு | | |
|---|---|---|
| மண்டலம் | தற்போதைய மதிப்பு | உயர்த்தப்பட உள்ள மதிப்பு |
| A | ரூ.1.10 | ரூ.1.65 |
| B | ரூ.0.80 | ரூ.1.20 |
| C | ரூ.0.50 | ரூ.0.75 |

மேற்கண்டவாறு மண்டல மதிப்பு உயர்வு செய்யப்பட உள்ள விவரத்தினை 13.09.2018 அன்று Indian Express நாளிதழில் மண்டல மதிப்பு உயர்வு செய்து தொடர்பாக ஆட்சேபணை ஏதும் இருப்பின் 30 நாட்களுக்குள் எழுத்து மூலமாகவோ அல்லது தபால் மூலமாகவோ தெரிவிக்குமாறு பொது மக்கள் அறியும் வண்ணம் வெளியிடப்பட்டுள்ளது. 13.10.2018 தேதியுடன் 30 நாட்கள் முடிவடைந்த போதும் சொத்துவரி பொது சீராய்வு தொடர்பாக பொது மக்களிடம் இருந்து ஆட்சேபணை ஏதும் வரப்பெறவில்லை. எனவே இந்நகர்மன்ற தீர்மான எண்.496, நாள்.10.09.2018ம் தேதிய மன்றத்தில் அனுமதி வழஙகப்பட்டுள்ள படி மண்டல மதிப்பு உயர்வு செய்யவும் தமிழ்நாடு மாவட்ட அரசிதழில் வெளியீடு செய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :–**

மன்றம் அனுமதி வழஙகலாம்

ந.க.எண்.7282/2018/அ2

**<u>தீர்மானம் :</u>**

அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**<u>தீர்மான எண்.537</u>**

**பொருள் 9 :** 1920 ம் வருடத்திய திருத்திமைக்கப்பட்ட தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 124ன் கீழ் ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை தொழில்வரி விகிதத்தை உயர்வு செய்ய அளிக்கப்பட்ட அதிகாரத்தின் கீழ் இந்நகராட்சி நகர்மன்ற தீர்மான எண் 425 நாள் 11.06.2018ன் படி தொழில்வரி 01.10.2018 முதல் திருத்தியமைக்கப்பட்டது. மேற்படி திருத்தியமைக்கப்பட்டதில் ரூ.75001க்கு மேல் அரையாண்டு வருமானம் பெறுபவர்களுக்கு ரூ 1270/— என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. தற்போது நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.12503/2018/ஆர்1, நாள் 21.05.2018ல் தொழில்வரி உச்ச வரம்புத் தொகை ஒரு வருடத்திற்கு ரூ.2500/— என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. எனவே கீழ்க்கண்டவாறு தொழில்வரித் தொகையினை திருத்தி நிர்ணயம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வரிசை எண் | அரையாண்டு வருமானம் | நகர்மன்ற தீர்மான எண் 425 நாள் 11.06.2018ன்படி திருத்தியமைக்கப்பட்ட தொழில் வரி தொகை | தற்போது திருத்தியமைக்கப்பட்ட தொழில்வரி தொகை |
|---|---|---|---|
| 1. | ரூ.21000 வரை | இல்லை | இல்லை |
| 2. | ரூ.21001 முதல் 30000 | ரூ.170/— | ரூ.170/— |
| 3. | ரூ.30001 முதல் 45000 | ரூ.420/— | ரூ.420/— |
| 4. | ரூ.45001 முதல் 60000 | ரூ.840/— | ரூ.840/— |
| 5. | ரூ.60001 முதல் 75000 | ரூ.1240/— | ரூ.1240/— |
| 6. | ரூ.75001க்கு மேல் | ரூ.1270/— | ரூ.1270/— (நகராட்சி நிர்வாக ஆணையர், செனை சுற்றறிக்கை ந.க.எண்.12503/2018 /ஆர்1நாள் 21.05.2018ன் படி) |

**அலுவலகக் குறிப்பு :—**

1. மன்றம் அனுமதி வழஙகலாம்.
2. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கையின் படி ரூ 1270/— என நிர்ணயம் செய்ததை ரூ 1250/— என நிர்ணயம் செய்யலாம்.

ந.க.எண்.5217/2018 /அ1

**<u>தீர்மானம் :</u>**

அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**<u>தீர்மான எண்.538</u>**

**பொருள் 10 :** அருப்புக்கோட்டை நகராட்சி புதிய பேருந்து நிலையத்தில் இயங்கி வரும் அம்மா உணவகத்திற்கு தேவையான இட்லி டோக்கன் காலியாகும் நிலை உள்ளது. ஏற்கனவே அக்டோபர் 2018 வரை மன்றப்பொருள் அனுமதி பெற்றுள்ளது. எனவே கூடுதலாக நவம்பர் 2018 முதல் மார்ச் 2019 வரை இட்லி டோக்கன் பெறுவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் 1 மாதத்திற்கு தேவைப்படும் இட்லி இரசீது புத்தகஙகள் 36 (36000 இரசீதுகள்) ஆகும். 5 மாதத்திற்கு தேவைப்படும் இட்லி இரசீது புத்தகஙகள் 180 (180000 இரசீதுகள்) ஐ தமிழ்நாடு பல்நோக்கு தொழிற் கூட்டுறவு சஙகம், திருச்சி நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்யவும், அதற்காகும் உத்தேச செலவினத் தொகை ரூ.43,000/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :—**

மன்றம் அனுமதி வழஙகலாம்.

ந.க.எண்.7908/2015 /எச்1

**<u>தீர்மானம் :</u>**

அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**<u>தீர்மான எண்.539</u>**

**பொருள் 11 :** அருப்புக்கோட்டை நகராட்சியில் நடைபெற்றுவரும் பணிகள் மற்றும் நடைபெறவுள்ள பணிகளின் விபரங்களை தொழில் மலர் – **2018** (தினகரன்) மற்றும் தமிழக அரசின் **2**ஆம் ஆண்டு சாதனை சிறப்பு மலர் – **2018** (தமிழ்முரசு) ஆகிய வற்றில் விளம்பரங்கள் செய்ததற்கு உரிய செலவினத்தொகை (தினகரன் – ரூ.**9975/–** + தமிழ் முரசு – ரூ.**9900/–**) = ரூ.**19,875/-**ஐ Kal Publications(P) LTD., Madurai நிறுவனத்தாருக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :–**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.8338/2018/இ1

**<u>தீர்மானம் :</u>**

அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**<u>தீர்மான எண்.540</u>**

**பொருள் 12 :** விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டை நகராட்சியின் **2011** மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மொத்த மக்கள் தொகை **87722** ஆகும். இந்நகராட்சியில் மொத்தம் **36** வார்டுகள் உள்ளன. நகரின் மொத்த பரப்பளவு **14.96** சதுர கி.மீ, சாலைகளின் மொத்த நீளம் **104.56** கி.மீ ஆகும். இந்நகராட்சியில் **117** துப்புரவு பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். இந்நகரில் ஒரு நாளொன்றுக்கு உருவாகும் குப்பையின் அளவு **34.50** மெட்ரிக் டன் ஆகும். திடக்கழிவு மேலாண்மை திட்டத்தினை செம்மையாக செயல்படுத்தவும், எரிபொருள் சிக்கனம் மற்றும் வாகன பயன்பாட்டுத் தொலைவை குறைக்கவும் வார்டுகளில் தினசரி உருவாகும் குப்பைகளை மைக்ரோ கம்போஸ்ட் யார்டுகளுக்கு கொண்டு சேர்ப்பதற்கு தேவைப்படும் Battery operator vehicle வாகனங்கள் வாங்குவதற்கு ஆகும் மதிப்பீட்டுத்தொகை ரூ.**81.00** இலட்சத்தினை தூய்மை இந்தியா திட்டம் **2018 –19**ன் கீழ் மேற்கொள்ள முழு மானிய நிதியுதவி கோரி நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்பிக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| **வ. எண்** | **பணியின் பெயர்** | **மதிப்பீடு ரூ. இலட்சத்தில்** |
|---|---|---|
| 1. | அருப்புக்கோட்டை நகருக்குள் அமைக்கப்பட உள்ள மைக்ரோ கம்போஸ்ட் யார்டுகளுக்கு குப்பைகளை கொண்டு சேர்ப்பதற்கு பேட்டரி மூலம் இயங்கக்கூடிய வாகனம் (BOV) – **45**எண்ணம் வாங்கும் பணி | 81.00 |
| | **மொத்தம்** | 81.00 |

**அலுவலகக் குறிப்பு :–**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண். 4453/2018/இ1

**<u>தீர்மானம் :</u>**

அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**<u>தீர்மான எண்.541</u>**

**பொருள் 13 :** அருப்புக்கோட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் துப்புரவு பணிகளை மேற்கொள்ள ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட **156** நிரந்தர துப்புரவு பணியாளர் பணியிடங்களில் தற்போது **113** நிரந்தர துப்புரவு பணியாளர்கள் மட்டுமே பணிபுரிந்து வருகின்றனர். மேலும் அரசாணைநிலை எண். **101** நாள் **30.04.1997** திருத்திய அளவு கோலின்படி அருப்புக்கோட்டை நகராட்சிக்கு கூடுதலாக தேவைப்படும் **270** துப்புரவு பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் தனியார் மயமாக்கல் மூலம், மூன்றாண்டுகளுக்கு மட்டும் நிரப்பிக்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் **18.12.2015**ம் தேதிய செயல்முறை ஆணை எண் **36909–2/P3/2015** ன் படி

உத்தரவு பெறப்பட்டு நகராட்சி ஆணையர் அருப்புக்கோட்டை அவர்களின் 10.07.2018 தேதிய செயல்முறை ஆணை எண் 11734/2015/எச்1 ன் படி 60 துப்புரவு பணியாளர்களை கொண்டு தனியார் மயமாக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

இந்நிலையில் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் ஆணை வழங்கப்பட்ட தேதியிலிருந்து மூன்று ஆண்டுகளுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்பட்டுள்ளதாலும் மேற்படி உத்திரவின் அனுமதி காலம் 17.12.2018 அன்றுடன் முடிவடைய இருப்பதாலும் திருதியமைக்கப்பட்ட அளவு கோலின்படி இந்நகராட்சிக்கு தேவைப்படும் 469 துப்புரவு பணியாளர்களில் நிரந்தர துப்புரவு பணியாளர்கள் 113 பேர் தவிர 356 நபர்களை தனியார் மயமாக்கல் மூலம் நிரப்பிக் கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை அவர்களிடம் நிர்வாக அனுமதி பெற உரிய பிரேரணை அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :–**

மன்றம் அனுமதி வழங்கலாம். ந.க.எண்.11734/2018 /எச்1

**<u>தீர்மானம் :</u>**

அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**<u>தீர்மான எண்.542</u>**

**பொருள் 14 :** அருப்புக்கோட்டை நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் (SBM 2018-19) திட்டத்தின் கீழ் பணி மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை நாளிதழ்களில் விளம்பரம் செய்த வகையில் விளம்பரக் கட்டணம் ரூ.115343/– ஐ Accord Advertising Agencies, Chennai நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :–**

மன்றம் அனுமதி வழங்கலாம். ந.க.எண்.4453/2018/இ1

**<u>தீர்மானம் :</u>**

அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**<u>தீர்மான எண்.543</u>**

**பொருள் 15 :** அருப்புக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட 9 இடங்களில் தானியங்கும் குடிநீர் மையங்கள் (Automatic Vending Centers) அமைக்கும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை நாளிதழ்களில் விளம்பரம் செய்த வகையில் விளம்பரக் கட்டணம் ரூ.115185/– ஐ Accord Advertising Agencies, Chennai நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

**அலுவலகக் குறிப்பு :–**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.9115/2018/இ1

**<u>தீர்மானம் :</u>**

அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**<u>தீர்மான எண்.544</u>**

**பொருள் 16 :** அருப்புக்கோட்டை நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் ரயில்வே பீடர் ரோடு கிழக்கு 1வது தெரு பகுதியில் நுண் உரக்கிடஙகு (Micro Compost Yard) அமைக்க ஆட்சேபனை தெரிவித்து ஆணையாளருக்கு எதிராக திரு.V.நாகராஜ் கண்ணன் என்பவர் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடரப்பட்ட வழக்கு எண் WP(MD)No.21833/2018ல் ஆணையாளர் அவர்களின் சார்பாக ஆஜரானதற்கான வழக்கறிஞர் ஊதியம் ரூ.8000/–ஐ திரு.N.திலீப்குமார்BA., B.L., அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண். 9969/2018/இ1

**<u>தீர்மானம் :</u>**

அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**<u>தீர்மான எண்.545</u>**

**பொருள் 17 :** அருப்புக்கோட்டை நகராட்சிக்கு உட்பட்ட 36 வார்டுகளில் உள்ள கைபம்ப் மற்றும் மினிபவர் பம்ப் ஆழ்துளை கிணறுகளில் உள்ள வேர் அடைப்பை Flushing மூலம் சரிசெய்ய 25 எண்ணத்திற்கு உத்தேச மதிப்பீடு ரூ.2.50 இலட்சம் ஆகும். எனவே மேற்கண்ட பணியை நகராட்சி குடிநீர் வழுங்கல் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதி வழஙகலாம்.

ந.க.எண். 9911/2018/இ1

**<u>தீர்மானம் :</u>**

அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**<u>தீர்மான எண்.546</u>**

**பொருள் 18 :** அருப்புக்கோட்டை நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு வாகன எண் TN 67 BY 8520 வாகனத்திற்கு தகுதிச்சான்று பெறவும், மேற்படி வாகனத்திலுள்ள பழுதுபணிகள் நீக்கம் செய்திட ஆகும் உத்தேச செலவீனதிற்கு உள்ளூர் நிறுவனஙகளிடமிருந்து விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் விபரம் கீழ்க்கண்டவாறு உள்ளன.

1) ஸ்ரீ பாலமுருகன் ஆட்டோமொபைல்ஸ் – ரூ.28,700/–
2) ஸ்ரீ மனோஜ்குமார் ஆட்டோ மொபைல்ஸ் – ரூ.27,300/–

வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்த அருப்புக்கோட்டை, ஸ்ரீ மனோஜ்குமார் ஆட்டோமொபைல்ஸ் நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழஙக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண். 8459/2018/எச்2

**<u>தீர்மானம் :</u>**

அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**<u>தீர்மான எண்.547</u>**

**பொருள் 19 :** அருப்புக்கோட்டை நகராட்சி பகுதிகளில் டெஙகு கொசு புழு இல்லாத வீடுகளில் ஸ்மைலி ஸ்டிக்கர் மற்றும் 52 வாரஙகள் என்ற ஸ்டிக்கர் ஒட்டப்படவேண்டுமென நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் கடிதத்தில் அறிவுறுத்தியபடி (கடித ந.க.எண்.1540/2015/அ4, நாள் 15.10.2018) அனைத்து வீடுகளில் விடுதலின்றி 52 வாரஙகள் என்ற ஸ்டிக்கர்கள் மற்றும் ஸ்மைலிகள் ஆகியவற்றை 20,000 எண்ணம் அச்சடிக்கவேண்டியுள்ளது. மேற்படி 52 வாரஙகள் என்ற ஸ்டிக்கர்கள் மற்றும் ஸ்மைலிகள் ஆகியவற்றை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அனுமதி கடிதம் C.No.29968/2012/OP3, நாள் 30.12.2013 மூலம் அனுமதி பெற்ற திருச்சி, Tamilnadu Multi Purpose Indco Serve அச்சக நிறுவனத்திற்கு நேரடியாக 20,000 எண்ணம் முதல் கட்டமாக பிரிண்ட் செய்ய உத்தேசமாய் ரூ.2,25,000/– செலவு செய்யவும் மன்ற அனுமதியை எதிர்நோக்கி ஆணையர் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழஙகவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.9605/2018/எச்2

**<u>தீர்மானம் :</u>**

அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**<u>தீர்மான எண்.548</u>**

**பொருள் 20 :** அருப்புகோட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட பள்ளிகள் மற்றும் பொது இடஙகளில் மாணவர்கள் மற்றும் பொதுமக்களுக்கு நிலவேம்பு குடிநீர் சூரணம் வாஙகி வழஙகிட சித்த மருத்துவ அலுவலரால் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. மேற்படி நிலவேம்பு குடிநீர் சூரணம் 400 கிலோ அளவு அரசு நிறுவனமான TAMPCOL சென்னை–108 நிறுவனத்திடமிருந்து

கொள்முதல் செய்யவும், அதற்கான உத்தேச செலவீனத்தொகை ரூ.1,20,800/– யை நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவு செய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) நோய்த்தடுப்பு மருந்தான நிலவேம்பு சூரணம் வழுங்கவேண்டிய அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று வாங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.5878/2016/எச்2

**<u>தீர்மானம் :</u>**

அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**<u>தீர்மான எண்.549</u>**

**பொருள் 21 :** அருப்புக்கோட்டை நகராட்சி பொது சுகாதார பிரிவு டெஙகு காய்ச்சல் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், கொசு புழு இல்லாத வீடுகளில் ஸ்மைலி ஸ்டிக்கர் மற்றும் 52 வாரஙகள் என்ற ஸ்டிக்கர் ஒட்டவேண்டும் என நகராட்சி மண்டல நிர்வாக இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் அறிவுரைபடி ஏற்கனவே 20,000 ஸ்டிக்கர் அச்சடித்து நகர் பகுதியில் உள்ள வீடுகளில் ஒட்டப்பட்டுள்ளது. நகராட்சி பகுதியில் உள்ள மொத்த வீடுகளின் எண்ணிக்கை சுமார் 35,000 என்பதால் மீதம் உள்ள வீடுகளில் ஸ்டிக்கர் ஒட்ட வேண்டி உள்ளதால் 15,000 எண்ணம் ஸ்டிக்கர் ஏற்கனவே அச்சடித்த (TAMIL NADU MULTIPURPOSE INDCO SERVE) நிறுவனத்திடம் அச்சடிக்கவும் அதற்கான உத்தேச செலவு தொகை ரூ.1,68,750/– க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிவழஙகலாம்.

ந.க.எண்.9935/2018/எச்2

**<u>தீர்மானம் :</u>**

அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**<u>தீர்மான எண்.550</u>**

**பொருள் 22 :** அருப்புக்கோட்டை நகராட்சி பொது சுகாதார பிரிவு டெஙகு காய்ச்சல் பரவா வண்ணம் நிலவேம்பு கசாயம் பொது மக்களுக்கு வழஙக வேண்டி உள்ளதால், நகராட்சியில் நிலவேம்பு கசாயம் இருப்பு குறைவாக உள்ளதால் பொது சுகாதார அவசர அவசியம் கருதி அரசு அஙகீகாரம் பெற்ற நிறுவனத்தினடமிருந்து (லட்சமி சேவா சஙகம்) வாஙகவும் (20கிலோ) பொதுமக்களுக்கு விளம்பரம் செய்யவும், (பேனர், ஆட்டோ) ஆணையரின் அனுமதிக்கும், அதற்கான செலவு தொகை ரூ.30,000/–க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிவழஙகலாம்.

ந.க.எண்.9936/2018/எச்2

**<u>தீர்மானம் :</u>**

அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**<u>தீர்மான எண்.551</u>**

**பொருள் 23 :** இந்நகராட்சியில் குடிநீர் நிதி 2018–19 ன் கீழ் அருப்புக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட குடிநீர் வாகனம் TN67B8965 வண்டியின் தகுதிச்சான்று 17.09.2018 உடன் முடிவடைவதால் வாகனத்தில் உள்ள பழுது பணிகளை சரிசெய்து தகுதிசான்று பெறுவதற்கு ஆகும் உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.45,500/– இந்நகர்மன்றத் தீர்மான எண்.480, நாள்.03.08.2018ல் நிர்வாக அனுமதி வழஙகப்பட்டுள்ளது.

அதன்பேரில் மேற்கண்ட பணிக்கு 11.09.2018 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்தகாரர் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1. | ஸ்ரீபாலமுருகன் ஆட்டோ மொபைல்ஸ் அருப்புக்கோட்டை | ரூ.48600/– |
| 2. | ஸ்ரீமனோஜ்குமார் ஆட்டோ மொபைல்ஸ் Sivakasi | ரூ.45000/– |

அலுவலகக் குறிப்பு :–

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்த புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஸ்ரீமனோஜ்குமார் ஆட்டோ மொபைல்ஸ், அருப்புக்கோட்டை நிறுவனத்தின் ஒப்பந்தபுள்ளியை ஒப்புக்கொள்ளலாம்.
2. மேலும் மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று வேலை உத்தரவு வழஙகியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

ந.க.எண்.7484/2018/இ1

**தீர்மானம் :**

அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**தீர்மான எண்.552**

தனி அலுவலர்
அருப்புக்கோட்டை நகராட்சி